REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2020 ஒக்டோபர் 28 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN



வடக்கின் உதயம்
பக்கம் 13-14

வரு. 88 இல. 256 | October 28,Wednesday, 2020 | 24 பக்கங்கள் | 30/-

விசேட வைத்திய நிபுணர்கள், தொற்று நோயியல் பிரிவுகள் அரசுக்கு ஆலோசனை

## முழு நாட்டையும் முடக்கி மக்களை பொருளாதார ரீதியான நெருக்கடிக்குள் தள்ள அரசாங்கம் தயாரில்லை



கொவிட் 19 சமூகப் பரவலடைந்துள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கவில்லை

சுப்பிரமணியம் நிஷாந்தன்

விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் தொற்று நோயியல் பிரிவின் ஆலோசனைகளின் பிரகாரமே அரசாங்கம் கொவிட் 19 ஒழிப்பு மற்றும் முகாமைத்துவம் செய்யும் செயற்பாடுகளையும் தீர்மானங்களையும் எடுத்துவருகிறது.

கொவிட் 19 வைரஸ் இலங்கையில் சமூகப் பரவலடைந்துள்ளதாக நிபுணர்கள் இதுவரை தெரிவிக்கவில்லையென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். முழு நாட்டையும் முடக்கி மக்களை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளுவதற்கு அரசாங்கம் தயாராகவில்லை. அதேபோன்று பாதிப்புக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கும் எதிர்காலத்தில் 06



வறுமை கோட்டின் கீழ் வாழும் இளைஞர், யுவதிகளுக்கு ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு வழங்கும் வேலைத் திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 101 பயிலுனருக்கு நேற்று நியமனக் கடிதங்கள் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதனால் வழங்கி வைக்கப்பட்ட போது....

# கொரோனா வைரஸ் தீவிரம் மேலும் மூவர் நேற்று மரணம்

இறந்தோர் தொகை 19 ஆக அதிகரிப்பு; தொற்றாளர் தொகையிலும் திடீர் அதிகரிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நேற்றைய தினம் மேலும் மூன்று கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் மரணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது. நேற்றுக்காலை ஜாஎல பகுதியைச் சேர்ந்த 41 வயது நபர் ஒருவரும் அதனையடுத்து நேற்றுப் பிற்பகல் கொழும்பு வாழைத் தோட்டம் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் மற்றும் கொழும்பு 2, கொம்பனித் தெரு பிரதேசத்தைச் சேர்ந்த 87 வயதுடைய பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

நேற்றுக்காலை மரணமடைந்த ஜாஎல பிரதேசத்தைச் சேர்ந்த நப[ர்] ஐடிஎச் வைத்தியசாலையிலு[ம்] ஏனைய இருவரும் கொழும்பு தேசி[ய] வைத்தியசாலையில் சிகிச்சை பெற்[று] வந்த நிலையில் உயிரிழந்துள்ளதா[க] சுகாதார அமைச்சு தெரிவித்தது.



சுகாதார அமைச்சு தெரிவித்தது.

மரணமடைந்துள்ள கொழும்பு கொம்பனி வீதியைச் சேர்ந்த 87 வயது பெண்மணி ஏற்கனவே காலில் நோயுடையவராக காணப்பட்டுள்ள நிலையில் அவர் கடந்த ஒரு வார காலமாக நோயுற்று சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்றும் அமைச்சு தெரிவித்




## புதிய அரசியலமைப்பு உருவாக்கும் பணிகள் மிகவும் துரிதகதியில்

அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல

சுப்பிரமணியம் நிஷாந்தன்



புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருவதாக வெகுஜன ஊடக அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று 06

## பொது மக்கள் சேவை தொடரும் ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு



கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காணப்பட்டாலும் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும் பொது மக்கள் சேவை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள ஜனாதிபதி செயலகம், கொரோனா தொற்றால் 06

## செந்தில்- ஞானசாரதேரர் சந்திப்பு



பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் நேற்று முன்தினம் கலகொடஅத்தே ஞானசார தேரரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார். அதேவேளை இந்தியா விற்கும் 06

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக அசேல குணவர்தன



புதிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக வைத்தியர் அசேல குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனையின் (களுபோவில வைத்தியசாலை) பணிப்பாளராக பணியாற்றியவராவார்.

இது தொடர்பான நியமனம் நேற்று முன்தினம் 06



கொவிட் 19 பரவலின் அச்சுறுத்தலையடுத்து கொழும்பு நகரப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் பொதுமக்களின் உடல் உஷ்ணத்தை கணிப்பதைப் படத்தில் காணலாம். (படம்: குக்மல் கமகே)

விஜய் சேதுபதியின் மகள் விவகாரம்;

## மன்னிப்பு கோரி வீடியோ பதிவிட்ட இலங்கை வாலிபர்

வேலை கிடைக்காத விரக்தியில் செய்தாராம்



திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

விஜய் சேதுபதியின் மகளுக்குப் பாலியல் வன்கொடுமை மிரட்டல் விடுத்த இலங்கை நபர் மன்னிப்பு கோரியுள்ளார். 06

## ரிஷாட்டின் பிணை மனு கோரிக்கை இரத்தாகி தொடர்ந்தும் விளக்கமறியல்

லோரன்ஸ் செல்வநாயகம்



பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் அவரது சட்டத்தரணி ஊடாக தாக்கல் செய்த பிணை மனுவை நிராகரித்துள்ள நீதிமன்றம் அவரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் 06

## அ. இ. ஜம்இய்யதுல் உலமாவின் முன்னாள் தலைவர் காலமானார்



அகில இலங்கை ஜம் இய் யதுல் உலமா சபையின் முன்னாள் தலைவரும் தற்போதைய பொதுச் செயலாளருமான அஷ்ஷைக் உஸ்தாத் முபாரக் (71) நேற்று மாலை கொழும்பில் காலமானார்.

சில காலமாக நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்று வந்த 06

கொவிட் 19 அச்சுறுத்தல்;

## தனியார்துறை ஊழியர்களின் சம்பள உடன்பாட்டு கால நீடிப்புக்கு அனுமதி

சுப்பிரமணியம் நிஷாந்தன்

கொவிட் 19 தொற்றால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கல் தொடர்பாக அரசாங்கம் உடன்பாடு தெரிவித்த காலப்பகுதியை நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரன தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றதுடன், Zoom app மூலம் 06

## நாட்டில் உப்பு விலையை குறைக்க டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

விமல் வீரவன்சவுடன் உரையாடி உடனடி தீர்வு



திடீரென ஏற்பட்ட உப்பு விலை அதிகரிப்பைக் குறைப்பதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

மாந்தை உப்பு நிறுவனத்தினால் குறித்த விலை அதிகரிப்பு தொடர்பான அறிவித்தல் நேற்று முன்தினம் 06

## கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளில் PCR பரிசோதனை



கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளில் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 06



## ஹற்றன் நகரில் மேலும்



## தலவாக்கலை, டயகம பகுதியில்